**Puducherry / Regional Bulletin / Tamil /18.10 Hrs. / 28.03.2025 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 28.03.2025 - வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

**---------------------------------------------------------------------------------------------**

***தலைப்புச் செய்திகள்***

தாய்லாந்து மற்றும் மியான்மரில் இன்று **நிலநடுக்கம்** ஏற்பட்டது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி கவலை வெளியிட்டுள்ளார்.

**BIMSTEC உச்சிமாநாட்**டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்தி மோடி, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி முதல், தாய்லாந்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

மின்னணு உற்பத்தியில் சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தும் வகையிலான, **மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி**த் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**மத்திய அரசு ஊழியர்கள்** மற்றும் **ஓய்வூதியர்**களுக்கான அகவிலைப் படி, 2 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளது.

***மோடி நிலநடுக்கம் -1 (18)***

தாய்லாந்து மற்றும் மியான்மரில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி கவலை வெளியிட்டுள்ளார். இவ்விரு நாடுகளைச் சேர்ந்த மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பை தாம் வேண்டுவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். தாய்லாந்து மற்றும் மியான்மருக்கு துணை நின்று, தேவையான எல்லா உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளதாகவும், இரு நாட்டு அரசுகளுடன் தொடர்பில் இருக்கும்படி, வெளியுறவு அமைச்சகத்திற்கு தாம் அறிவுறுத்தி இருப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

மியான்மரில் இன்று காலை, 7.7 மற்றும் 6.4 ரிக்டர் அளவில் அடுத்தடுத்துப் பதிவான 2 நில அதிர்வுகளால், மாண்டலே நகரின் புகழ்பெற்ற ஐராவதி ஆற்றுப் பாலம் இடிந்து விழுந்ததாகவும், சாகேய்ங் பகுதியை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள், 900 கிலோமீட்டர் தாண்டி தாய்லாந்து தலைநகர் பேங்காக் வரை உணரப் பட்டதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே மியான்மரில், மாண்டலே, நேப்பித்தா, உள்ளிட்ட 6 பிராந்தியங்களில் அவசர நிலை அறிவிக்கப் பட்டுள்ளது. நில அதிர்வில் பல கட்டிடங்கள் மற்றும் சாலைகளுக்கு சேதம் ஏற்பட்டதாகவும், 3 பேர் உயிரிழந்த நிலையில், சுமார் 90 பேரை காணவில்லை என்றும், மியான்மர் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மோடி நிலநடுக்கம் -2 (5)*

தாய்லாந்தில், இந்தியர்கள் தொடர்பான அசம்பாவிதங்கள் குறித்து, இதுவரை தகவல் இல்லை என்றாலும், தாய்லாந்தில் உள்ள இந்தியத் தூதரகம், அந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து, நிலவரங்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. தாய்லாந்தில் உள்ள இந்தியர்கள் அவசரத் தேவைகளுக்கு தூதரகத்தை அணுக தனி தொலைபேசி எண் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி தாய்லாந்து – 1 (7)*

ஆறாவது BIMSTEC உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்தி மோடி, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி முதல், தாய்லாந்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். வளமான, நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, BIMSTEC பிராந்தியம் என்ற கருப்பொருள் அடிப்படையில், இம்மாநாடு நடைபெற உள்ளது. BIMSTEC நாடுகளுக்கு இடையே, ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, BIMSTEC தலைவர்கள், இம்மாநாட்டில் விவாதிக்க உள்ளனர். பிரதமரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து, கூடுதல் விபரங்கள்…

**(வாய்ஸ்)**

*மோடி தாய்லாந்து – 2 (11)*

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தாய்லாந்து செல்வது இது 3ஆவது முறையாகும். இம்முறை தாய்லாந்து பிரதமரின் அழைப்பின் பேரில் அவர் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்கிறார். தொடர்ந்து, இலங்கை அதிபர் அழைப்பின் பேரில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஏப்ரல் 4ஆம் தேதி, தாய்லாந்தில் இருந்து இலங்கை செல்கிறார். இந்த 3 நாள் இலங்கை பயணத்தின்போது, அதிபர் திரு. திஸநாயக்கே-வை அவர் சந்தித்து, ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட துறைகளில், ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்கிறார். இலங்கையில், அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்திக்கிறார். தொடர்ந்து அவர் அனுராதபுரம் சென்று இந்தியாவின் நிதி உதவியுடன் கூடிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி மகாராஷ்டிரா (12)*

பிரதமர் திரு. நரேந்தி மோடி, வரும் 30ஆம் தேதி மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார். மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில், ஸ்மிருதி மந்திர் தரிசனம் முடிந்த பின்னர், அவர் Deeksha Boomi செல்கிறார். பின்னர், மாதவ் நேத்ராலயா உயர் சிகிச்சை கண் மருத்துவ மையத்திற்கு அடிக்கல் நாட்டி, பொதுக்கூட்டம் ஒன்றிலும் உரையாற்றுகிறார். நாக்பூரில் உள்ள, சோலார் குழுமத்தின் பாதுகாப்பு உற்பத்தி ஆலை வளாகத்தில், ட்ரோன் பரிசோதனைக்கான ஓடு பாதை வசதிகளையும், பிரதமர் தொடக்கி வைக்கிறார். பின்னர் சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூரில், மொத்தம் 33 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர், மக்களுக்கு அர்ப்பணித்து வைக்கிறார். தொடர்ந்து, பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மசோதா (10)*

கடல் வழி சரக்குப் போக்குவரத்து மசோதா, மக்களவையில் இன்று நிறைவேற்றப் பட்டது. ஏற்கனவே உள்ள, 1925ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பதிலாக, இப்புதிய மசோதா கொண்டுவரப் பட்டது. கடல் வழி சரக்குப் போக்குவரத்து நிறுவனங்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை வரையறுக்கும் வகையிலான விதிமுறைகள் இம்மசோதாவில் இடம் பெற்றுள்ளன. ஏற்கனவே உள்ள விதிமுறைகளின் வாசகங்களை எளிமைப் படுத்துவதன் மூலம், சட்டத்தின் உணர்வை மாற்றாமல், புரிதலை மேம்படுத்துவதே, புதிய மசோதாவின் முக்கிய நோக்கம் என்று, மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், மசோதா மீதான விவாதங்களுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

*நிதி ஆயோக் (12)*

வர்த்தக கண்காணிப்புத் தொடர்பான நிதி ஆயோக் அமைப்பின் காலாண்டு அறிக்கையை, நிதி ஆயோக் உறுப்பினர் திரு. அரவிந்த் வீர்மானி புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். நடப்பு நிதியாண்டின் முதல் 2 காலாண்டுகளில், இந்தியாவின் மொத்த வர்த்தகம், 5.67 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக, இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வருடாந்திர அடிப்படையில், ஏற்றுமதி 5.6 சதவிகித அளவிற்கும், இறக்குமதி 6.07 சதவிகித அளவிற்கும் அதிகரித்து உள்ளது. உலக அளவிலான ஜவுளி ஏற்றுமதியில் இந்தியா, உலக அளவில் 6ஆவது இடத்தில் உள்ள போதிலும், பருத்தி உள்ளிட்ட இயற்கை இழைத் துணி ரகங்களின் ஏற்றுமதியே அதிகம் என்றும், அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. புவி – அரசியல் ரீதியில், உலக வர்த்தகத்தில் இந்தியாவிற்கு உள்ள பல்வேறு வாய்ப்புகளும், வர்த்தக கண்காணிப்பு அறிக்கையில் இனம் காணப் பட்டுள்ளன.

***அமைச்சரவை (14)***

மின்னணு உற்பத்திப் பொருட்களுக்கான உற்பத்தி சங்கிலியில் சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தும் வகையிலான, மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தித் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். இந்தியப் பொருட்களின் ஏற்றுமதி பட்டியலில், மின்னணுப் பொருட்கள் தற்போது, 3ஆவது இடத்தில் உள்ளதாகவும், புதிய திட்டத்தினால், 96 ஆயிரம் பேருக்கு, நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார். நடப்பாண்டு, காரீஃப் பருவத்தில், விவசாயிகளுக்குத் தேவையான பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கு, ஊட்டச் சத்து அடிப்படையில் மானியம் வழங்குவதற்கான விகிதாசார விவரங்களுக்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பீகாரில், பாட்னா – ஆரா – சசாராம் இடையே, 120 கிலோமீட்டர் நீளத்திற்கு, 4 வழி நெடும்பாதை அமைக்கும் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

***அகவிலைப் படி(6)***

**மத்திய அரசு ஊழியர்கள்** மற்றும் ஓய்வூதியர்களுக்கான அகவிலைப் படியை, இவ்வாண்டு ஜனவரி 1ஆம் தேதி முதல், 2 சதவிகிதம் உயர்த்தி வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால், 48.66 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 66.55 லட்சம் ஓய்வூதியதாரர்களும், பயனடைவார்கள் என்று, மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

***விருது (11)***

2024ஆம் ஆண்டிற்கான **சரஸ்வதி சம்மான்** விருதுக்கு, **ஸ்வாமிநாராயண சித்தாந்த சுதா** என்னும் நூலை எழுதிய சமஸ்கிருத அறிஞர் மகா **மகோபாத்யாய சாது பத்ரேதாஸ்** தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். 1966ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தில் பிறந்தவரான **சாது பத்ரேதாஸ்**, **ஸ்வாமிநாராயண்** ஆசிரமத்தைச் சேர்ந்த துறவியாவார். 1991ஆம் ஆண்டு நிறுவப்பட்ட **சரஸ்வதி சம்மான்** விருது, இந்தியர் ஒருவரால் – இந்திய மொழியில் எழுதப்பட்ட இலக்கிய படைப்பிற்கு ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது. 15 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டு பத்திரம் அடங்கிய இந்த விருதுக்குரிய அறிஞர்கள், அதற்கான தெரிவுக் குழு ஒன்றினால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. **A.K. சிக்ரி**, தற்போது தெரிவுக் குழுவின் தலைவராக உள்ளார்.

***தினம் - கிருஷ்ணன் (15)***

இணைய தளங்களின் பெயர், மின்னஞ்சல் முகவரி உட்பட, இணையப் பரப்பின் எல்லா அம்சங்களிலும், எல்லா மொழிகளும் ஏற்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான, **அனைத்து மொழி ஏற்பு தினம்**, இன்று கடைபிடிக்கப் படுகிறது. இதையொட்டி புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் திரு. எஸ். கிருஷ்ணன் பேசுகையில், பன்மொழிக் கலாச்சாரமும், டிஜிட்டல் முனைப்புமுள்ள நாடான இந்தியாவில், **எதற்கும் - எவருக்கும்** மொழி ஒரு தடையாக மாறிவிடக் கூடாது என்றார். நாட்டின் பன்முகத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில், இணையம் அமைய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். இந்திய மொழிகளுக்கு இடையில், மொழிபெயர்ப்புகளைத் தடையின்றி மேற்கொள்வதில், **பாஷினி** மென்பொருளின் முக்கியத்துவத்தை **திரு. கிருஷ்ணன்** வலியுறுத்தினார். இணையம் எவ்வாறு நிர்வகிக்கப் படுகிறது என்பதை கவனிப்பதில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் ஒருங்கிணைப்போடு கூடிய அணுகுமுறை ஒன்றை அரசு கடைபிடிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

***யஷ்வந்த் (10)***

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி திரு. யஷ்வந்த் வர்மாவின் வீட்டில், ரொக்கப் பணம் சிக்கியதாகக் கூறப்படும் பிரச்சனையில், திரு. வர்மா மீது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டு இருந்த, மனு ஒன்றை, உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. முதலில், அகநிலை விசாரணைகளை முடிக்குமாறு, நீதிபதி திரு. அபய் வோக்கா, நீதிபதி திரு. உஜ்ஜல் பூயான் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று உத்தரவிட்டது. அகநிலை புலனாய்வு முடிந்த பின்னர், திரு. வர்மா மீது தவறு இருப்பதாக தெரிய வந்தால், அவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவோ அல்லது, பதவி நீக்கத்தை பரிந்துரைக்கவோ, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி முடிவெடுக்கலாம் என்று, நீதிமன்ற அமர்வு கூறியது.

***செயற்கைக்கோள் (6)***

செயற்கைக் கோள்களை விண்ணில் வைத்தே ஒருங்கிணைக்க ஏதுவாக, தொலைநிலை கட்டுப்பாடுகள் மூலம், செயற்கைக் கோள் ஒன்றை, விண்ணில் வைத்தே பல திசைகளில் சுழற்றிப் பார்க்கும் Rolling பரிசோதனைகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். சந்திரயான்-4 உட்பட, இந்தியாவின் எதிர்கால விண்வெளித் திட்டங்களுக்கு இத்தகைய Rolling வசதி, மிக அவசியம் என்றும், இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*வானிலை (9)*

வரும் 30ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஒருசில இடங்களில், அதிகபட்ச வெப்பநிலை, 1 முதல் 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்றும், அதற்கடுத்த 2 நாட்களில், வெப்பநிலை சற்று குறையலாம் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால், இன்றைய தினம், மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், புதுவை – காரைக்கால் பகுதிகளில், பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஐபிஎல் (4)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை – பெங்களூரு அணிகள் மோத உள்ளன. ஐதராபாத்தில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், லக்னோ அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில், ஐதராபாத் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*ஆஸ்திரேலியா – இந்தியா (7)*

கடந்த 2023ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அரசால் நிறுவப்பட்ட, **ஆஸ்திரேலியா – இந்தியா உறவுகள் மைய**த்தின், ஆலோசனைக் குழு உறுப்பினராக முன்னாள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் வாவ் நியமிக்கப் பட்டுள்ளார். கல்வி, சுகாதாரம், தொழில்-வர்த்தகம், அறிவியல்- தொழில்நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதில், ஆஸ்திரேலியா – இந்தியா உறவுகள் மையம் முக்கிய பங்காற்றி வருகிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தாய்லாந்து மற்றும் மியான்மரில் இன்று **நிலநடுக்கம்** ஏற்பட்டது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி கவலை வெளியிட்டுள்ளார்.

**BIMSTEC உச்சிமாநாட்**டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்தி மோடி, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி முதல், தாய்லாந்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

மின்னணு உற்பத்தியில் சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தும் வகையிலான, **மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி**த் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**மத்திய அரசு ஊழியர்கள்** மற்றும் **ஓய்வூதியர்**களுக்கான அகவிலைப் படி, 2 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK**